_

**<u>முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>**

முன்னிலை - திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 23 ம்நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-பங்குனித் திங்கள் 9 ம்நாள்)

<u>மேல்முறையீட்டு வழக்கு எண்.173/2018</u>
(CNR No.TNED01-001166-2018)

1. ஜி.ராமசந்திரன் (இறந்துவிட்டார்), வயது சுமார் 55, த/பெ.குருசாமி, வசிப்பிடம் கதவு எண்.275, ஜான்ஸ் பில்டிங்க், அசோக் நகர், மூலப்பாளையம், ஈரோடு -1, ஈரோடு தாலூக்கா, ஈரோடு மாவட்டம்.
(இ.ம.எண்.2/2025 ல் 01.07.2025 தேதியிட்ட உத்தரவின்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது)
2. சுமதி,வயது சுமார் 58, க/பெ.லேட்.ஜி.ராமசந்திரன், வசிப்பிடம் கதவு எண்.10 ஏ, வேலாயுதம்பாளையம், அவல்பூந்துறை மெயின் ரோடு, அவல்பூந்துறை, ஈரோடு - 638 115.
3. விக்னேஷ், வயது சுமார் 28, த/பெ.லேட்.ஜி.ராமசந்திரன், வசிப்பிடம் கதவு எண்.10 ஏ, வேலாயுதம்பாளையம், அவல்பூந்துறை மெயின் ரோடு, அவல்பூந்துறை, ஈரோடு - 638 115.
4. பொன்சங்கரி, வயது சுமார் 24, த/பெ.லேட்.ஜி.ராமசந்திரன், வசிப்பிடம் கதவு எண்.10 ஏ, வேலாயுதம்பாளையம், அவல்பூந்துறை மெயின் ரோடு, அவல்பூந்துறை, ஈரோடு - 638 115.
(இறந்து போன மேல்முறையீட்டாளரின் வாரிசுகளான 2 முதல் 4 மேல்முறையீட்டாளர்கள் இ.ம.எண்.1/2025 ல் 26.03.2025 தேதியிட்ட உத்தரவின்படி தரப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு இ.ம.எண்.2/2025 ல் 01.07.2025 தேதியிட்ட உத்தரவின்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது).

.. மேல்முறையீட்டாளர்/
5 ம் பிரதிவாதி/இறந்துபோன
மேல்முறையீட்டாளரின்
வாரிசுகள்

// எதிர் //

1. ஜெகநாதன்,வயது சுமார் 63, த/பெ.நாச்சிமுத்து ஆசாரி, வசிப்பிடம் கதவு எண்.134, முத்துகவுண்டன்பாளையம், நஞ்சை ஊத்துக்குளி கிராமம், ஈரோடு தாலூக்கா, ஈரோடு மாவட்டம். .. எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி

2. தியாகராஜன்,வயது சுமார் 50, த/பெ.லேட்.நாச்சிமுத்து ஆசாரி, வசிப்பிடம் கதவு எண்.135, முத்துகவுண்டன்பாளையம், நஞ்சை ஊத்துக்குளி கிராமம், ஈரோடு தாலூக்கா.
3. தங்கமணி,வயது சுமார் 40, த/பெ.லேட்.நாச்சிமுத்து ஆசாரி, க/பெ.எம்.கதிர்வேல், வசிப்பிடம் லால்பகதூர் சாஸ்திரி வீதி, சிவகிரி, ஈரோடு தாலூக்கா.

.. எதிர்மேல்முறையீட்டாளர்கள்/
3, 4 பிரதிவாதிகள்

இந்த மேல்முறையீடு, ஈரோடு 2ம் கூடுதல் சார்பு நீதிமன்றம், அசல் வழக்கு எண்.31/2011 ல் 22.02.2018 ம்தேதி வழக்கை பகுதியாக அனுமதித்து பாகப் பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரங்களை வழங்கி பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து அசல் வழக்கை முழுமையாக தள்ளுபடி செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டுமென்று கோரி 5ம் பிரதிவாதியால் 16.07.2018 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இடையே:**

ஜெகநாதன் .. வாதி

// எதிர் //

1. கோவிந்தம்மாள் (இறந்துவிட்டார்)
   (இ.ம.எண்.480/2013 ல் 11.07.2013 தேதியிட்ட உத்தரவின்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது)
2. ரத்தினம் (இறந்துவிட்டார்)
   (இ.ம.எண்.340/2017 ல் 18.08.2017 தேதியிட்ட உத்தரவின்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது)
3. தியாகராஜன்
4. தங்கமணி
5. ஜி.ராமசந்திரன்.
   (5ம் பிரதிவாதி இ.ம.எண்.439/2011 ல் 22.09.2011 தேதியிட்ட உத்தரவின்படி தரப்பினராகச் சேர்க்கப்பட்டு இ.ம.எண். 863/2011 ல் 03.04.2012 தேதியிட்ட உத்தரவின்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது). .. பிரதிவாதிகள்

நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவாச் சொத்துக்களை நலந்திகடு கண்டு 5 சம பாகங்களாகப் பிரித்து அதில் வாதிக்கு ஒரு சம பாகத்தை ஒதுக்கீடு செய்து தனிச் சுவாதீனம் செய்து கொடுக்க பாகப் பிரிவினைக்கான முதல்நிலைத் தீர்ப்பாணையை பிறப்பிக்க வேண்டுமென்று கோரியும்,

(2) தாவாச் சொத்துக்களில் 2, 4 பிரதிவாதிகளின் பாகத்தை வாதி இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 22ன்படி கிரயம் பெறுவதற்கு முன்னுரிமை உள்ளது என்று விளம்புகைப் பரிகாரம் கோரியும்,

(3) 23.09.2010 மற்றும் 20.01.2011 ஆகிய தேதிகளிட்ட கிரயப் பத்திரக்ஙளில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தை மதிப்பிற்கான தொகை ரூ.28,600/-ஐ 5ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டு தாவாச் சொத்துக்களில் பொதுவில் 3/5 பாகத்தைப் பொருத்து வாதி மற்றும் 3ம் பிரதிவாதிக்கு கிரயப் பத்திரம் எழுதிக் கொடுக்க

வேண்டுமென்றும், ஒருவேளை 3ம் பிரதிவாதிக்கு விருப்பம் இல்லை என்றால் வாதிக்கு மட்டும் எழுதிக் கொடுக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் நீதிமன்றம் 5ம் பிரதிவாதியின் சார்பாக வாதி மற்றும் 3ம் பிரதிவாதியின் கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்து சொத்தின் சுவாதீனத்தை உறுதி செய்ய வேண்டுமென்றும் கோரியும், (இ.ம.எண்.863/2011 ல் 03.04.2012 தேதியிட்ட உத்தரவின்படி இந்தப் பரிகாரம் சேர்க்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

(4) 1, 2, 4 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ எவரும் தாவாச் சொத்துக்களைப் பொருத்து இறுதியான பாகப்பிரிவினை ஏற்படும் வரை தாவாச் சொத்துக்களில் எவ்வித வில்லங்க பாராதீனமும் செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்க கோரியும் மற்றும் வாதியின் இவ்வழக்குச் செலவுத் தொகையுடன் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கு, விசாரணை நீதிமன்றத்தின் முழு விசாரணைக்கு பின்னிட்டு, அசல் வழக்கை பகுதியாக அனுமதித்து பாகப் பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரங்களை வழங்கி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளதில் மனக்குறைவுற்ற 5ம் பிரதிவாதி இம்மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்து, விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து, அசல் வழக்கை முழுமையாக தள்ளுபடி செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டுமென்று வேண்டியுள்ளனர்.

| | | |
|---|---|---|
| இந்த மேல்முறையீடு தாக்கல் செய்த நாள் | - | 16.07.2018 |
| இந்த மேல்முறையீட்டுக்கு வழக்கு மதிப்பு | - | ரூ.1,21,000 |
| இதற்கு திருத்தப்பட்ட தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் தாவா மதிப்பீட்டு சட்ட பிரிவுகள் 37(2), 27(c) உ/இ 52 ன் கீழ் | | (ரூ1,20,000+ரூ.1000) |
| செலுத்தப்பட்ட நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | - | ரூ.5030/-(ரூ.5000+ரூ.30) |

<u>வழக்கு மதிப்பீட்டு விபரம்</u>

அ) பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனத்திற்காக :-

| | | |
|---|---|---|
| தாவா சொத்துக்களின் மொத்த மதிப்பு | .. | ரூ.6,00,000/- |
| அதில் வாதிகளின் 1/5 பங்கு மதிப்பு | .. | ரூ.1,20,000/- |

இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் மற்றும் தாவா மதிப்பீட்டு சட்டம் பிரிவு 37(2)ன் கீழ் செலுத்தப்பட்ட நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.5000/-

ஆ) <u>நிரந்தர உறுத்துக்கட்டளைக்காக</u> -

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கான வழக்கு மதிப்பு ரூ.1000/-, இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் சட்டம் பிரிவு 27(c)ன் கீழ் செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.30/-

| | |
|---|---|
| தாவா மொத்த மதிப்பு ரூ.1,20,000/- +ரூ.1000/- | = ரூ.1,21,000/- |
| மொத்த நீதிமன்ற கட்டணம் ரூ.5000+ ரூ.30 | = ரூ.5,030/- |

இந்த மேல்முறையீட்டு வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 03.03.2026 ம் தேதி இறுதியாக ஒருசேர விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு,மேல்முறையீட்டாளர்/5 ம் பிரதிவாதி தரப்பில் திரு.எஸ்.ஜீவானந்தம், வழக்கறிஞர் அவர்களும், மேற்படி மேல்முறையீட்டாளர் இறந்துவிட்டதால் 2 முதல் 4 மேல்முறையீட்டாளர்களாகச் சேர்க்கப்பட்டும், 1 ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் திரு.டி.செந்தில்குமார், வழக்கறிஞர் அவர்களும், 2 ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் திரு.கே.மோகன்ராஜ், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், 3 ம் எதிர்மேல்முறையீட்டாளர் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜரின்மையாலும், இருதரப்பு வாதுரைகளை ஒரு சேரக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, வழக்கு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## <u>தீர்ப்பாணை</u>

1. இந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. ஈரோடு 2 ம் கூடுதல் சார்பு நீதிமன்றம், அசல் வழக்கு எண்.31/2011 ல் 22.02.2018 ம்தேதி பாகப் பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரங்களை வழங்கி வழக்கை பகுதியாக அனுமதித்து பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து உத்தரவிடப்படுகிறது.

3. செலவு தொகை இல்லை.

<u>சான்றளிக்கப்பட்ட செலவுத் தொகைப் பட்டியல்</u>

| <u>மேல்முறையீட்டாளர்கள் தரப்பில்</u> | <u>1 ம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில்</u> | |
|---|---|---|
| (தாக்கல் இல்லை) | வக்காலத்து ஸ்டாம்பு | ரூ. 10.00 |
| | வழக்கறிஞர் கட்டணம் | ரூ.7,780.00 |
| | | --------------- |
| | மொத்தம் | ரூ.7,790.00 |
| | | ----------- |

## Schedule of Property

Erode Registration District, Aval Poondurai Sub Registration District, Erode Taluk, Nanjai Uthukuli Village, Old S.F.No.115/A3, R.S.No.49, as per Natham Survey R.S.No.837/10 P.Hec.00.04.05, in this an extent of 6 cents situated within the following boundaries.

| | |
|---|---|
| North of | the property purchased by Govindammal and Saraswathi |
| South of | East west itteri |
| West of | North South Main Road |
| East of | the remaining properties of Lakshmi |

The above properties with all constructions there on bearing D.Nos.133, 134 and 135. Electric connections bearing S.C.Nos.908, 963, 964 and all other appurtenant rights.

இன்று 2026 ம் வருடம் மார்ச் மாதம் 23 ம்நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு வழங்கப்பட்டது.

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.03.23 19:51:54 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

தீர்ப்பாணை
மே.மு.வ.எண்.173/2018
நாள் 23.03.2026
மு.கூ.மா..நீ.ம., ஈரோடு.

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE OF ERODE.

A.S.173/2018

1.G.Ramachandran (died) and 3 others ... Appellants
(Amended as per order in IA 2/25,
dated 01.07.25)

//Vs//

1. Jaganathan and 2 others ... Respondents

VALUATION SLIP

| | | |
|---|---|---|
| 1. Nature of the appeal | : | Suit for partition, separate possession and permanent injunction |
| 2. Section and Sub section | : | Section 37(2), 27(c) r/w 52 of TNCF Act |
| 3. Value of the appeal | : | Rs.1,21,000/- (Rs.1,20,000+Rs.1000) |
| 4. Court fees paid | : | Rs.5030/-(Rs.5000+Rs.30) |

Sd/xxxx
Appellant

Sd/xxxx
Advocate for Appellant.

// By Order //

(Sd./)Translator
IADJ Court, Erode.